ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2229/9 - 2021 මැයි මස 28 වැනි සිකුරාදා - 2021.05.28
*2229/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்***

*1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10(இ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

பேராசிரியர் **டபிள்யூ. டி. லக்ஷ்மன்**,
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2021*, மே *28*.

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள், "2021 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு 2021, பெப்புருவரி 18 ஆந் திகதியிடப்பட்ட 2215/39 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டு, 2021, மாச்சு 09ஆந் திகதியிடப்பட்ட 2218/38 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் மற்றும் 2021, ஏப்பிறல் 09 ஆந் திகதியிடப்பட்ட 2222/60 ஆம் இலக்க வர்த்தமானி

(அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் மூலம் திருத்தப்பட்டவாறான 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

(அ) அதன் 4 ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம் -

"4. பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் 3 ஆம் விதியின் கீழ் வேண்டப்பட்டவாறு, அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதன் மீது முப்பது (30) நாட்களினுள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற சொல்லப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தும் மொத்தத்திலும் இருபத்தைந்து சதவீதத்திற்குக் (25%) குறையாமல் உரிமம்பெற்ற வங்கியொன்றினூடக இலங்கை ரூபாய்க்கு மாற்றிக்கொள்ளுதல் வேண்டும்".

"4அ எவ்வாறாயினும், நாணயச் சபையானது, அத்தகைய ஏற்றுமதித் துறையின், கைத்தொழிலின் அல்லது ஏற்றுமதியாளரின் ஏற்றுமதிப் பொருட்களும் செயன்முறைகளும் உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாத இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மிக உயர்வான சதவீதமொன்றினை பயன்படுத்துகின்றன என அதன் தற்றுணிபில், நாணயச் சபை திருப்தியடையுமாயின், இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் மொத்தத்தின் இருபத்தைந்து சதவீதத்தினைவிடக் குறைவாக மாற்றுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய குறிப்பான ஏற்றுமதித் துறைகளை அல்லது கைத்தொழில்களை அல்லது தனிப்பட்டவர்களை நிர்ணயிக்கலாம்.

ஆயினும், எவ்வாறாயினும், எத்தகைய சந்தர்ப்பத்திலும், உடனடியாக மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறு நாணயச் சபை, அதன் தற்றுணிபில் வழங்கக்கூடிய அத்தகைய பகுதியளவான விலக்களிப்பானது மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளில் பத்து சதவீதத்திற்கு (10%) கீழ் இருத்தலாகாது".

"4ஆ மேலே 4 மற்றும் 4அ விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றும் திகதி, மேலே விதி 3 (I) இல் தேவைப்படுத்தப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்கு முன்னரான திகதியினை விட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது. (அதாவது கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தியதல்ல)"

(ஆ) அதன் 5 ஆம் விதியினை நீக்கி பின்வரும் புதிய விதியினை அதற்குப் பதிலீடு செய்வதன் மூலம்-

"5. நாணயச் சபையானது, பொதுவாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமையினையும் இலங்கையில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டங்களையும் பரிசீலனையில் கொண்டு, நிலவுகின்ற சூழ்நிலைகளில் பொருத்தமானதென அத்துடன் இயைபானதென நாணயச் சபை கருதக்கூடியவாறு விடயத்திற்கேற்ப உரிமம்பெற்ற வங்கியொன்றினூடாக இலங்கை ரூபாய்களினுள் மாற்றல் செய்யப்பட வேண்டிய இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின், அத்தகைய வேறு சதவீதத்தை காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்.".

04-667

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.